Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

05.01.2021 செவ்வாய்க்கிழமை



## உறவுகளை விடுவியுங்கள்

(விரிவு 03 ஆம் பக்கம்)



# தமிழர்களின் கோரிக்கையை ஏற்று அரசியல் கைதிகளை விடுவிக்குக!

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜனவரி 5

ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் கோரிக்கையை ஏற்று, தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 2

## 13 வரை மழை தொடரும்

*மூத்த விரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 5

வடக்கு மாகாணத்துக்கு தற்போது கிடைத்து வரும் அவ்வப் போதான மழை 2

## போராட்டத்தை குழப்பிய பொலிஸார்

அம்பாறை, ஜன. 5

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியை கொரோனா 2


வாழ்வாதாரத்தை கருத்திலெடுத்து

## கடைகளைத் திறக்க அனுமதியுங்கள்

*மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் கூட்டாகக் கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஜன. 5

மருதனார்மடம் சந்தைக் கொத்தணி பரவலையடுத்து மூடப்பட்டுள்ள தமது வர்த்தக நிலையங்களை மீளத் திறப்பதற்கு அனுமதிக்குமாறு மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான மனுவை சுன்னாகம் பிரதேச சபைத் தவிசாளரிடமும் கையளித் 2



## 224 ஆவது எம்.பியானார் அத்துரலிய ரத்தின தேரர்

கொழும்பு, ஜன. 5

அத்துரலிய ரத்தன தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் இன்று பதவியேற்றார். சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றதை அடுத்து அவர் உறுப்பினர்கள் பெயர் பட்டியலில் கையொப்பமிட்டார். கடந்த பொதுத் தேர்தலில் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்குக் (அபே ஜனபல கட்சி) கிடைத்த தேசியப் 2



## நிலைமைகளை கவனத்திலெடுத்து கடைகளைத் திறக்க அனுமதிப்போம்

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்*

யாழ்ப்பாணம், ஜன. 5

மருதனார்மடம் கடைத் தொகுதிகளை திறப்பதற்கான அனுமதி இன்னமும் எம்மால் வழங்கப்படவில்லை. நிலைமைகளை கவனத்திலெடுத்து அதற்குரிய அனுமதிகளை நாம் வழங்குவோம். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். மருதனார்மடம் சந்தைக் கொத் 2

## கொரோனா தடுப்பூசி பெறுவதற்கான உடன்பாட்டில் கைச்சாத்திட அனுமதி

கொழும்பு, ஜன. 5

கோவக்ஸ் திட்டத்தின் ஊடாக கொரோனா தடுப்பூசிகளைப் பெறுவதற்கான உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. கோவக்ஸ் வசதி என்பது அரசு மற்றும் தடுப்பூசி உற்பத்தியாளர்களிடையே அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் சமமான விநியோகத்தை உறுதிசெய்ய தொடங்கப்பட்ட ஒரு உலகளாவிய திட்டமாகும். கோவக்ஸ் வசதி, தடுப்பூசிகள் மற்றும் நோய்த் 2

## 'மணி அணி' நீக்கத்துக்கு நீதிமன்றம் தடையுத்தரவு!!

யாழ்ப்பாணம், ஜன. 5

மணிவண்ணன் சார்பு உறுப்பினர்களை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) எடுத்த நடவடிக்கைக்கு, வழக்கு விசாரணை முடிவடையும் வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு 2

## ஒரே இரவில் 4 கோயில்களில் கைவரிசை காட்டிய திருடர்கள்

வவுனியா, ஜன. 5

வவுனியா கந்தபுரம் மற்றும் தவசிகுளம் பகுதிகளில் நேற்று இரவு மாத்திரம் 4 ஆலயங்களில் திருட்டுச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. கந்தபுரம் பிள்ளையார் கோயில் மற்றும் அம்மன் கோயில், பொன்னாவர சங்குளம் பிள்ளையார் கோயில், 2

வெளிநாடு செல்வதற்கு கொழும்பு சென்ற

## பூநகரி, அளவெட்டி வாசிகளுக்கு தொற்று

கிளிநொச்சி, ஜன. 5

பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிக்குடாவைச் சேர்ந்த இருவருக்கும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அளவெட்டியைச் சேர்ந்த 2

# தமிழர்களின்...

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்,
இது தொடர்பில் மேலும் தெரிவித்த தாவது:
கொரோனா வேகமாக பரவிவரும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி வடக்கு, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் இன்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதிக்கு மனுவொன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.
சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் கோரிக்கையாகும்.
இந்தக் கோரிக்கைக்கு செவிமடுத்து தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் மன்னிப்பின்கீழ் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அவ்வாறு இல்லாவிட்டால் பிணையாவது வழங்கவேண்டும். இதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிணை கையொப்பம் வைப்பதற்கு தயாராகவே இருக்கின்றனர்.
அமைச்சர்கள், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும், என்றார். (ஓ,44)

# கடைகளை...

துள்ளனர்.
கொரோனா அசாதாரண சூழல் காரணமாக கடந்த மாதம் 13ஆம் திகதி மருதனார்மடம் கடைத் தொகுதிகள் அனைத்தும் பொதுமக்களின் நலன்கருதி மூடப்பட்டன. தற்போது இயல்பு நிலைக்கு மாறியிருந்தும், வர்த்தகர்கள் அனைவரும் இரு தடவைகள் பி.சி.ஆர். சோதனைக்கு ஒத்துழைத்திருந்தும் தொற்று இல்லை என்ற அறிக்கை கிடைக்கப் பெற்ற பின்னரும் எமது வர்த்தக நிலையங்கள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.
தற்போதுள்ள சூழலில் வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு, நாம் எமது வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கவும், இந்தக் கடைகளில் பணியாற்றும் ஊழியர்கள் தங்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தவும் ஏதுவாக கடைத் தொகுதியைத் திறப்பதற்கான அனுமதியை வழங்குமாறு அவர்கள் கோரியுள்ளனர். (ஓ,5)

# கொரோனா தடுப்பூசி...

தடுப்புக்கான உலகளாவிய கூட்டணியுடன் இலங்கை ஏற்கனவே இணைந்துள்ளது. இந்த வசதி மூலம் கொரோனா தடுப்பூசிகளைப் பெற இலங்கை தகுதியுடையது என்றும் உலக சுகாதார நிறுவனம் அங்கீகாரம் அளித்துள்ளது.
இலங்கையின் குழு, சேமிப்பக திறன் மற்றும் கொரோனாத் தடுப்பூசி செயல்முறை தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை விவரிப்பதன் மூலம் தடுப்பூசிகளைப் பெறுவதற்கான ஆரம்ப விண்ணப்பத்தை அரசு சமர்ப்பித்தது என சுகாதார அமைச்சர் தனது அமைச்சரவை ஆய்வறிக்கை மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.
இந்த செயல்முறைக்கான இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக ஜனவரி 8ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை இந்த உடன்படிக்கையை செய்ய வேண்டும். தடுப்பூசி விண்ணப்பத்தின் இரண்டாம் பகுதியை சட்ட மா அதிபர் வழங்கிய வழிகாட்டுதல்களின்படி சமர்ப்பிக்கவும், கோவக்ஸ் வசதி மூலம் தடுப்பூசிகளை ஒதுக்கும் போது உற்பத்தியாளருடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (ஓ,இ)

# போராட்டத்தை...

தொற்றைக் காரணமாக முன்னிறுத்தி, பிரதேச செயலக வளாகத்துக்கு வருகை தந்த பொலிஸ் மற்றும் புல னாய்வு பிரிவினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.
ஊடகங்களுக்கு அரசியல் பிரமுகர்களும், பொது அமைப்பைச் சார்ந்தவர்களும் கருத்து தெரிவிப்பதை பதிவுசெய்ய வேண்டாம் என்று கூறியதோடு போராட்டப் பதாகைகளையும் பொலிஸார் கைப்பற்றிச் சென்றனர். (ஓ,இ)

# 13 வரை...

எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் தொடரும் வாய்ப்புக்கள் உள்ளன என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்தார்.
அத்துடன் இன்றும், நாளையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கனமழைக்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ,5)

# நிலைமைகளை....

தணி பரவலையடுத்து மூடப்பட்டுள்ள தமது வர்த்தக நிலையங்களை மீளத் திறப்பதற்கு அனுமதிக்குமாறு மருதனார்மடம் சந்தைச் சூழலிலுள்ள வர்த்தகர்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார்.
மருதனார்மடம் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் நேற்றும் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மருதனார்மடத்திலுள்ள வாகனச் சுத்திகரிப்பு நிலையத்துக்கு வந்து 4 மணி நேரம் நின்று சென்ற ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவ்வாறான சூழலில் எவ்வாறு வர்த்தக நிலையங்களை திறப்பதற்கு அனுமதிக்க முடியும்? மருதனார்மடம் கொத்தணி குறைவடைந்து இல்லாமல் போகும் போதே அனுமதிகளை வழங்கக் கூடியதாக இருக்கும். நாம் நிலைமைகளை அவதானித்து வருகின்றோம். அதற்கு அமைவாகவே கடைத் தொகுதியை திறப்பதற்கான அனுமதியை வழங்க முடியும், என்றார். (ஓ,5)

# 'மணி அணி'...

பிறப்பித்துள்ளது.
யாழ்ப்பாணம் மாநகரசபை மேயர் வி.மணிவண்ணன் மற்றும் ஏனைய 3 மாநகர சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி நகர சபையின் 2 உறுப்பினர்களை கட்சியை விட்டு நீக்க அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நடவடிக்கையெடுத்தது.
இது தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கட்சித் தலைவர், செயலரின் கையொப்பத்துடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.
அதைத் தொடர்ந்து 21 நாள்களின் பின்னர், குறிப்பிட்ட 6 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிகளும் வறிதாவதாக தெரிவத்தாட்சி அலுவலரால் அறிவிக்கப்பட்டது.
இந்த அறிவித்தலுக்கு எதிராக 6 உறுப்பினர்களும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். இது தொடர்பில் ஆராய்ந்த நீதிமன்றம், இந்த உத்தரவுக்கு எதிராக 14 நாள்கள் இடைக்கால தடைவிதித்தது.
கடந்த சில வழக்கு தவணைகளில் ஒவ்வொரு 14 தினங்களுக்கும் தடையை நீடித்து வந்தது.
இன்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கு விசாரணை முடிவடையும் வரை உறுப்புரிமை நீக்கத்துக்கு இடைக்கால தடைவிதித்தது. (ஓ,இ)

# ஒரே இரவில் 4....

தவசி குளம் வைரவர் கோயில் ஆகியவற்றிலேயே இந்தத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கோயில்களுக்குள் நுழைந்த திருடர்கள் கதவுகளை உடைத்து உண்டியல்களையும், ஒலிபெருக்கிச் சாதனங்களையும் திருடிச் சென்றுள்ளனர். இரண்டு ஆலயங்களில் உண்டியல் பணத்தை மாத்திரம் எடுத்து விட்டு உண்டியல்களை வீசி விட்டுச் சென்றுள்ளனர். மற்றைய இடங்களில் உண்டியல்களையும் சேர்த்து எடுத்துச் சென்றுள்ளனர். (ஓ,110)

# 224 ஆவது எம்.பியானார்...

பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு அத்துரலிய ரத்தன தேரரின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவித்திருந்தது.
ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநிதித்துவப்படுத்தி 2004ஆம் ஆண்டு களுத்துறை மாவட்டத்தில் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட ரத்தன தேரர், 2010ஆம் ஆண்டு ஏழாவது நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டார்.
இவர் 2015ஆம் ஆண்டு எட்டாவது நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். (ஓ,44)

# பூநகரி, அளவெட்டி....

ஒரு வருக்கும் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. இவர்கள் உடனடியாக கண்டுபிடிக்கப்பட்டு கிளிநொச்சி கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 9பேரும் பளை மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவருமாக 11 பேர் வெளிநாடு செல்வதற்காக கடந்த மாதம் 27ஆம் திகதி கொழும்புக்குச் சென்றுள்ளனர்.
பி.சி.ஆர். சோதனையை அங்கு மேற்கொண்டுள்ளனர். அதன் முடிவுகள் கிடைப்பதற்கு இடையில் நேற்றைய தினம் வாகனம் ஒன்றில் ஊருக்குத் திரும்பியுள்ளனர். இதற்கிடையில் சோதனை முடிவுகளில் மூவருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. கொழும்பில் அவர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து புறப்பட்ட தகவல் பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்டத்துக்குரிய பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. தொற்றுக்குள்ளானவர்கள் உள்பட அனைவரும் பூநகரிக்கு நேற்றிரவு வந்திருந்த நிலையில் அவர்களைப் பொலிஸார் தனிமைப்படுத்தினர். தொற்றுக்குள்ளான மூவரும் கிளிநொச்சி கிருஸ்ணபுரத்திலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஓ,214)

# கொரோனா கொல்ல முன்னர் எங்கள் உறவுகளை விடுவியுங்கள்

## தமிழர் தாயகம் முழுவதும் இன்று போராட்டங்கள்








யாழ்ப்பாணம், ஜன. 5

சிறைச்சாலைகளில் வேகமாக பரவிவரும் கொரோனாத் தொற்று அபாயத்திலிருந்து தமிழ் அரசியல் கைதிகளை பாதுகாப்பதற்காக அவர்களை விடுவிக்கவேண்டும் எனக் கோரி தமிழர் தாயகமாக வடக்கு கிழக்கு மாகாணங்களின் அனைத்து மாவட்டங்களிலும் இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

நாடாளாவிய ரீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை கொரோனாத் தொற்றின் ஆபத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக உரிய நடவடிக்கைகயை விரைந்து எடுக்க வேண்டும் என்று போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஆபத்தை எதிர்நோக்கி உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு மனுவும் அனுப்பி வைக்கப்பட்டது.

சிறையில்வாடும் கைதிகளில் 7 பேர் பெண்களாக உள்ளனர் என்றும் அவர்களில் ஒருவர் ஒன்றரை வயது குழந்தையின் தாய் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளில் 14பேர் வரையிலானவர்கள்; தொற்றுக்குள்ளாகியிருப்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் மனிதாபிமான ரீதியில் நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணம்**

யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குப் பின்புறமாக வுள்ள நல்லை ஆதீனம் முன்பாகவும், சாவகச்சேரி பேருந்து நிலையம் முன்பாகவும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

**வவுனியா**

நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா காமினி மகா வித்தியாலத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**கிளிநொச்சி**

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி ஏ 9 வீதியில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் காலை 10 மணியளவில் ஆரம்பமானது. அரசியல் கைதிகளின் குடும்பங்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் வடக்கு மாகாண மக்களின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**மன்னார்**

மன்னாரில் இரண்டு இடங்களில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் நகர் மற்றும் முருங்கன் பேருந்து நிலையத்தில் போராட்டம் நடத்தப்பட்டது. மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

**முல்லைத்தீவு**

அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்பாக, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் அமைப்பின் தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

**மட்டக்களப்பு**

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(ஓ.6, 18, 56, 60, 110, 113, 213, 246)

---

## விதிகளுக்கு முரணாக நிகழ்வுகள்: மீறுவோருக்கு கட்டாய தனிமை

### சாவ.சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொடிகாமம், ஜன.5

சுகாதார விதிமுறைகளை மீறி நிகழ்வுகளை நடத்துபவர்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதுடன், பி.சி.ஆர் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

மேலும் நிகழ்வில் கலந்துகொள்வோரின் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பெயர்ப்பட்டியலில் பெயர் இல்லாதவர்கள் அந்த நிகழ்வில் பங்குபற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது. நிகழ்வுகளுக்கு அனுமதி பெறும் போது எல்லாவற்றுக்கும் சம்மதம் தெரிவித்து விட்டு நிகழ்வுகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது விட்டால் நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதோடு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்டு சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற மரணச் சடங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் மக்கள் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றத் தவறியுள்ளமை அவதானிக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ɒ-159)

---



23ஆம் திகதி

## விமான நிலையங்கள் முழுமையாகத் திறப்பு

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 5

சுற்றுலாப் பயணிகளுக்காகவும், வணிகத் தேவைகளுக்காகவும் ஜனவரி 23ஆம் திகதி முதல் விமான நிலை யங்கள் முழுமையாகத் திறக்கப்படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: கொரோனா தாக்கத்தால் கடந்த மார்ச் 19ஆம் திகதி விமான நிலையங்கள் மூடப்பட்டன. 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் சுற்றுலாத்துறையை மீள ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2ஆவது அலையால் அதனை செய்யமுடியாமல்போனது. டிசெம்பரில் பேச்சுக்களை ஆரம்பித்து 2021ஆம் ஆண்டு ஜனவரியில் சுற்றுலாப்பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

சுற்றுலாத்துறைக்கு சிறந்த கேள்வியும் இருக்கின்றது. அத்துறையில் உள்ளவர்களின் நலனையும் கருதி விரைவில் சுற்றுலாத்துறையை மீள ஆரம்பிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது, என்றார். இதேவேளை உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு ஏற்கனவே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ,44)

## கடமையேற்பு

கொழும்பு, ஜன.5

கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட அனுஷ பெல்பிட்ட இன்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

சிரேஸ்ட நிர்வாக அதிகாரியான இவர் இதற்கு முன்னர் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## பொலிஸ் நிலையங்களை தரப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜன.5

அனைத்து பொலிஸ் நிலையங்களையும் தரப்படுத்தும் வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன என பொலிஸ் ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் திருமதி ரேணுகா ஜயசுந்தர தெரிவித்தார்.

இதற்குரிய முன்னோடித் திட்டம் களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களில் நடைமுறையாகும் எனவும் நாட்டில் உள்ள 494 பொலிஸ் பிரிவுகள் சார்ந்த எல்லைகளை நிர்ணயிப்பதில் எழுந்துள்ள நெருக்கடிகளைத் தீர்ப்பது தரப்படுத்தலின் நோக்கமாகும் எனவும் தெரிவித்தார். (ச)

## பட்டாணிச்சூரில் 4,078 பேர் தனிமையில்!

வவுனியா, ஜன.5

வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் வசித்த கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், அந்தப் பகுதியிலுள்ள 938 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 78 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பட்டாணிச்சூர் பகுதி பொலிஸாரால் இன்று காலை தற்காலிகமாக முடக்கப்பட்டதுடன், பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் தொடர்பான விவரங்கள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ந-110)



# 'மாஸ்க்' அணியாதோர் இனிக் கவனம்

கொழும்பு, ஜன. 5

சுகாதார வழிகாட்டல்களைக் கணக்கில் கொள்ளாது, முகக் கவசம் அணியாமல் நடமாடுவோரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் இன்று முதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முகக் கவசம் அணியாதவர்கள் கைது செய்யப்படுமிடத்து, அவர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு மேலதிகமாக, அவ்வாறானவர்கள் கட்டாய பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கூறினார். (ஒ,இ)

## தொற்றால் இறந்தவரின் சடலம் ஒரு மாதமாக பிரேத அறையில்

கொழும்பு, ஜன.5

கொரோனாத் தொற்றால் உயிரிழந்த ஒருவரின் சடலம் ஒரு மாதகாலமாக ஹோமாகம மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கடந்த டிசம்பர் 05ஆம் திகதி ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 64 வயது ஆண் ஒருவர் தொற்றால் உயிரிழந்திருந்தார்.

அவரது ஆள் அடையாளம் மற்றும் உறவினர்களைக் கண்டறிய முடியாத நிலையில் சடலம் தற்போதும்கூட மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (வ-இ)

## பூங்காவில் மரங்கள் அழிப்பு : அறிக்கை கோருகிறார் அமைச்சர்

குருநாகல், ஜன.5

குருநாகல் ரஜபிஹில்ல பூங்காவில் இருந்த பழமைவாய்ந்த 28 மரங்கள் வெட்டி அகற்றப்பட்டமை தொடர்பில் தமக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர, மத்திய சுற்றுச் சூழல் அதிகாரசபையின் தலைவருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த மரங்களை அகற்றுவதற்காக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அல்லது மாவட்ட அதிகாரிகள் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் ஆராயுமாறும் அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். மேலும், கொவிட்19 பரவல் நிலையை வனங்களை அழிப்பதற்காக சிலர் பயன்படுத்தி வருகின்றனர் என சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், உடனடியாக அதிகாரிகளை ஈடுபடுத்தி அது தொடர்பில் ஆராயுமாறும் பணிப்புரை விடுத்துள்ளார். (ந-இ)

## பிக்குகளுக்கான தானத்தை கொள்ளையிட்டோர் கைது

அநுராதபுரம், ஜன.5

அநுராதபுரம் - ருவன்வெலிசாயாவில் பிக்குகளுக்காக தானம் செய்யப்படும் பொருள்களைக் கொள்ளையிட்டமை தொடர்பில் இருவர் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அநுராதபுரம் பொலிஸ் நிலையத்துக்கு ஞாயிற்றுக் கிழமை கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கொள்ளை மற்றும் மத நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தியமை தொடர்பில் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (வ-இ)

## அடக்கமா தகனமா என்பது தேசிய பிரச்சினை இல்லை

### கூறுகிறார் பெரமுனவின் பொதுச்செயலாளர்

கொழும்பு, ஜன.5

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற விவகாரம் இலங்கையின் தேசிய பிரச்சினையில்லை என பொதுஜனபெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழு இது தொடர்பான தீர்மானத்தை எடுக்கும். கொரோனா வைரஸ் தொடர்பாக முடிவெடுப்பதற்கான அதிகாரம் வேறு எந்த குழுவுக்கும் இல்லை. ஏனைய குழுக்களால் ஆராய மாத்திரம் முடியும். உடல்கள் தொடர்பான விவகாரம் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது சில குழுக்கள் இதனை தேசிய பிரச்சினையாக மாற்ற முயல்கின்றன என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

## தப்பிய தொற்றாளர்கள் இன்னும் சிக்கவில்லை

பொலநறுவை, ஜன.5

பொலநறுவை கல்லெல்ல கொவிட்19 சிகிச்சை நிலையத்திலிருந்து தப்பிய ஐந்து கைதிகளில் நால்வர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் தொடர்பில் ஏதாவது தகவல் கிடைத்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். தப்பிச் சென்ற நால்வரும் நீர்கொழும்பு ரிமாண்ட் சிறைச்சாலைக் கைதிகள் என்பதும் தொற்று உறுதியானதையடுத்து அவர்கள் மேற்படி சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# தொடர் மழையால் விவசாயிகள் பாதிப்பு!

மன்னார், ஜன.5

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக நெற்பயிர் செய்கை வயல்களில் உருவாகியுள்ள புற்களுக்கு கிருமிநாசிகள் தெளிக்க முடியாமல் செய்கையாளர்கள் அந்தரிக்கின்றனர். தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாகவே இந்த நிலை உருவாகியுள்ளது.

இதனால் தக்க சமயத்தில் புற்கள் வளராமல் தெளிக்க வேண்டிய கிருமி நாசினிகளைத் தெளிக்க முடியாதுள்ளது என்று மன்னார் மாவட்டத்தின் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ந-213)



## கொழும்பு நீதிமன்றங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள்

கொழும்பு,ஜன.5

கொழும்பு நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை சுகாதார பாதுகாப்புடன் மீண்டும் ஆரம்பிப்பதற்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் நீதியமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற கடமைகளுக்கான சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் ஆகியோருக்குத் தேவையான சுகாதார பாதுகாப்பு கொவிட் உபகரணங்களே இவ்வாறு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில் கொழும்பு மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.(ஐ-இ)

## தகனத்தைப் பரிந்துரைக்க குழு நியமிக்கப்படவில்லை

கொழும்பு,ஜன.5

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பாக ஆராய்வதற்கு, எந்தக் குழுவையும் நியமிக்கவில்லை என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதா அடக்கம் செய்வதா என்பதை ஆராய்வதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொவிட்டைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எப்போதும் விஞ்ஞான ரீதியிலானவையாகக் காணப்பட வேண்டும், மத இன அரசியல் சமூக மற்றும் புராண அடிப்படையில் இதற்கு தீர்வைக் காண முடியாது.

கொரோனா வைரஸ் புதிய நோய் என்பதால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆரம்ப கட்டப் பரிந்துரைகள் மாற்றமடையலாம் என்று அவர் பதிலளித்துள்ளார். (க-இ)

## சிவதீட்சை

சாவகச்சேரி,ஜன.5

சாவகச்சேரி கெருடாவில் ஞான வீரபத்திரர் கோவில் நிர்வாகத்தினரால், தைப் பூசத்தன்று சிவதீட்சை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோவிலில் சிவதீட்சை பெற விரும்பும் அடியார்கள் ,மாணவர்கள் கோவில் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## உக்ரைன் நாட்டின் 173 சுற்றுலாவிகளுக்கு தொற்று இல்லை

*முன்னாள் இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.5

இலங்கைக்கு சுற்றுலப் பயணிகளாக வந்த 173 உக்ரைன் பிரஜைகளையும் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தியவேளை அவர்கள் கொரோனாவால் பாதிக்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது என்று ரஸ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஸ்கைப் எயார்லைன்ஸ் ஊடாக இலங்கை வந்த சுற்றுலாப்பயணிகள் அவர்கள் தங்குவதற்கு என ஏற்பாடு செய்யப்பட்ட ஹொட்டலில் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். 567 உக்ரைன் சுற்றுலாப்பயணிகளில் இருவர் மாத்திரமே கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய் அறிகுறிகளை வெளிப்படுத்திய இரு நோயாளிகளும் ஹோட்டலில் தனி அறைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒரு தொகுதி சுற்றுலாப்பயணிகள் இலங்கை வரவுள்ளனர் என்றார். (ப)

## சுற்றுலாப்பயணிகளால் பொருளாதாரம் சரியும்

### ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜன.5

சுற்றுலாப்பயணிகளால் ஏற்படக் கூடிய கொரோனா பரவல் காரணமாக, இலங்கையின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படலாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐரோப்பாவில் கொரோனா தீவிரமாகப் பரவுவது குறித்த கரிசனை மற்றும் சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தல்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றப்பட்டமை ஆகிய வற்றை கருத்தில் கொண்டு உக்ரைனைச் சேர்ந்தவர்கள் மேற்கொண்டுள்ள சுற்று லாப்பயணம் தொடர்பில் அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும். உரிய நடைமுறைகளைப் பின்பற்றாமல் சுற்று லாப்பயணிகளை இலங்கைக்கு அழைத்து வந்ததன் காரணமாக, பொது மக்கள் மேலும் கொரோனா ஆபத்தை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. ஏற்கனவே கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சுற்று லாத்துறை சார்ந்த வர்த்தகங்களுக்கு, இவ்வாறான முறையில் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதால் எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-இ)

## குழு மோதல்; சிறுவன் பரிதாபச் சாவு

அம்பாறை, ஜன.5

அம்பாறை அக்கரைப் பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் தாக்கப்பட்டு, சிறுவனொருவர் உயிரிழந்துள்ளார்.

அட்டாளைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியுள்ளது. இதன் போது தாக்குதலுக்கு உள்ளாகிய சிறுவன் உடனடியாக அட்டாளைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)





புத்தாண்டில் வடக்கு மாகாணத்துக்குட்பட்ட அனைத்து அரச அலுவலகங்களும் சேவைகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப நிகழ்வு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், மாகாண சபைத் தலைவர் சி.வி.கெ சிவயானம், யாழ் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ற-7)

## நகர வன பூங்கா பொதுமக்கள் பாவனைக்கு

கொழும்பு, ஜன.5

காலி முகத்திடலுக்கு முன்னால் உள்ள பாலதக்சமாவத்தையில் அமைக்கப்பட்டுள்ள நகர வன பூங்கா கடந்த 30 ஆம் திகதி பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

“சுபீட்சத்தின் நோக்கு“ நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இரண்டு ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந் நகர வன பூங்கா மூன்று கட்டங்களைக் கொண்ட திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக செலவிடப்பட்ட தொகை 135 மில்லியன் ரூபாவாகும்.

2020 ஜூன் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தின் பணிகள் 2020 நவம்பர் 15 ஆம் திகதி நிறைவடைந்தன. திட்ட வடிவமைப்பு, நில வடிவமைப்பு என்பன நகர அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டதுடன், பிரதான திட்ட ஒப்பந்தக்காரராக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் செயற்பட்டது. (ந)

## கல்முனையில் இன்றும் 4 தொற்று

கொழும்பு, ஜன.5

கல்முனை சுகாதார பிராந்தியத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் இன்று அண்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பரிசோதனைகளின் முடிவாக நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் நால்வரும் மத்திய முகாம் நகரப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் நாவிதன்வெளி, சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பதிவாகியுள்ள தொற்றாளர்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்வடைந்துள்ளன. (ச-இ)

# சடலங்களை அடக்கம் செய்வது சுகாதார அதிகாரிகள் முடிவே!

## இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்


கொழும்பு, ஜன.5

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைப்படியே கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் தகனம் செய்யப்படுவதால், நிபுணர் குழுவொன்றின் அடிப்படையில் சடலங்களைத் தகனம் செய்யும் முடிவு முன்னர் எடுக்கப்பட்டது.

இதன்காரணமாக நிபுணர் குழு பரிந்துரை செய்தால் மாத்திரமே சடலங்களைத் தகனம் செய்யும் முடிவு மாற்றப்படும். இது அரசியல்வாதிகள் எடுக்கும் முடிவில்லை. கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் கடந்த ஒரு வருடகாலமாக சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையை அரசாங்கம் பின்பற்றி வருகின்றது என்றார்.(ற-இ)



கொரோனாத் தொற்று

# அபாயப் பகுதிகளின் புதிய வரைபடம்

கொழும்பு, ஜன.5

நாட்டில் கொரோனாத் தொற்று பரவல் அதிகமாக காணப்படும் அபாயமிக்க பகுதிகளின் புதிய வரைபடத்தை சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு வெளியிட்டுள்ளது. சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த வரைபடம் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தல் மையங்களிலும் பதிவான நோயாளர்களின் எண்ணிக்கை அடங்கிய இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலும் தொற்று நோய் விஞ்ஞான பிரிவால் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த 14 நாள்களில் பதிவான கொவிட்19 நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த தகவல்கள் புதுப்பிக் கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# 45,000 தாண்டியது தொற்று

நேற்றும் 467 பேர் அடையாளம்

கொழும்பு, ஜன.5

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

நேற்றும் 467 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இதுவரையில் 41 ஆயிரத்து 498 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்து 242 ஆக அதிகரித்துள்ளது. தொற்றாளர்களில் 37 ஆயிரத்து 817 பேர் குணமடைந்துள்ளனர். 7 ஆயிரத்து 210 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-22)

**சந்திப்பு**



ஐ ரோட் திட்டத்தில் யாழ்.மாநகர எல்லைக்குள் புனரமைப்பு செய்யப்படவுள்ள 17 வீதிகளின் வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துவது தொடர்பான சந்திப்பு முதலவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர் மற்றும் வட மாகாண ஐ ரோட் திட்டப் பணிப்பாளர், மாநகர ஆணையாளர் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். (சு-26)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் மாத்தளையில் மூவர் கைது

கொழும்பு, ஜன.5

மாத்தளை பகுதியில் வெளிநாட்டுத் துப்பாக்கி மற்றும் வெற்றுத் தோட்டாக்களுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இஹலகம பகுதியில் பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு மருத்துவரை நியமித்து உதவுக

## கோரிக்கை விடுக்கின்றன பிரதேச பொது அமைப்புகள்

முல்லைத்தீவு, ஜன.5

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்குமாறு இப்பகுதி பொது அமைப்புகள் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

ஐயன்கன்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியராக நியமிக்கப்பட்டவரே நட்டாங்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் நாள்தோறும் அரை நேரம் கடமையில் உள்ளார். ஏனைய நேரங்களில் நோயாளர்கள் மல்லாவி மற்றும் மாங்குளம் ஆதார வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டி உள்ளது. ஊசி போடுவதற்கு கூட நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்கள் இல்லை என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமங்களைக் கொண்ட மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் நட்டாங்கண்டல் வைத்தியசாலையை நம்பி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள நிலையில் இரவு வேளைகளில் பாம்புக்கடி, விபத்துகள், விலங்குகளின் தாக்குதல்கள் போன்ற ஆபத்துக்களை எதிர்கொள்கின்ற மக்களை உயிராபத்தான நிலையில் மல்லாவி மற்றும் மாங்குளம் ஆதார வைத்தியசாலைகளுக்கே கொண்டுசெல்ல வேண்டிய நிலையில் மாந்தை கிழக்கு மக்கள் நெருக்கடிகளுடன் வாழ்கின்றனர். கிராம மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடிகளுக்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தீர்வுகள் வழங்க வேண்டும் என பொது அமைப்புகள் மேலும் வலியுறுத்தி உள்ளன. (ந-ரி2)



# 1000 ரூபா இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

## செயற்பாட்டாளர் கணேசலிங்கம் எச்சரிக்கை

ஹற்றன், ஜன.5

தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவும், 25 நாட்கள் வேலை நாள்களும் அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர் போராட்டம் வெடிக்கும் என்று பெருந்தோட்ட தொழிலாளர் ஊதிய உரிமைக்கான இயக்கத்தின் செயற்பாட்டாளர் தங்கவேல் கணேசலிங்கம் எச்சரிக்கை விடுத்தார். மஸ்கெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். கம்பனிகள் முன்வைத்துள்ள புதிய யோசனையில் தேயிலை விலைக்கேற்ற கொடுப்பனவாக 25 ரூபா வழங்கப்படவுள்ளது. இதன்படி தற்போது 750 ரூபா சம்பளம் பெறுபவர்கள் 775 ரூபாவை பெறும் நிலை உருவாகும். அப்படியானால் வெறும் 25 ரூபாவை மட்டுமே சம்பள உயர்வாக பெற்றுக்கொடுப்பதற்கான மோசடிகள் இடம்பெறுகின்றன. இதற்கு உடன்படமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# தொலைக்கல்வி முறையின் குறைபாடுகளுக்குத் தீர்வு

***கல்வி அமைச்சு தெரிவிப்பு***

*கொழும்பு, ஜன.5*

தொலைக்கல்வி முறையில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக கிராமிய மட்டத்தில் தொலைத்தொடர்பாடல் கோபுரங்களை அமைக்க வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் கபில பெரேரா சுட்டிக்காட்டினார். (ஐ-இ)

# ஸ்ரீலங்கன் கேட்டரிங்கில் 72 ஊழியருக்குத் தொற்று

*கொழும்பு, ஜன.5*

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கேட்டரிங் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களில் 72 பேருக்கு இதுவரை கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கம்பஹா மாவட்ட சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் மருத்துவர் மிகராபா தெரிவித்தார். அங்கு நேற்றும் இரு தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-இ)

# பி.சி.ஆர் இயந்திரம் கையளிப்பு

*கொழும்பு, ஜன.5*

இரத்தினபுரி ஆதார மருத்துவ மனைக்கு 50 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பி.சி.ஆர். இயந்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இதுவரை இரத்தினபுரி மருத்துவ மனையின் பி.சி.ஆர். பரிசோதனைகள் யாவும் பஹத்தரட்ட தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் இரத்தினபுரி மாவட்டத்தின் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதியுதவியின் மூலம் இப்பரிசோதனை இயந்திரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




# கொரோனா தடுப்பூசி தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்

*கொழும்பு, ஜன. 5*

கொரோனாவுக்கான தடுப்பூசியை இலங்கையர்கள் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்று, தடுப்பூசி விவகாரங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். (ஒ,இ)

# நடமாடும் வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

*கொழும்பு,ஜன.5*

அதிக விலைக்கு பொருள்களை விற்பனை செய்யும் நடமாடும் வியாபாரிகளால் பாதிக்கப்படுகின்ற மக்கள் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு உடனடியாக அறிவிக்க முடியும் என்று கொழும்பு மாவட்டச் செயலர் பிரதீப் யசரத்ன அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இவ்வாறான நடமாடும் வியாபாரிகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் கொழும்பு மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. தற்பொழுது கொழும்பு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பகுதிகள் விடுவிக்கப்படுவதனால், இந்த நடமாடும் வியாபாரிகள் வழமைபோல் வியாபாரத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர். சில வியாபாரிகள் அதிக விலைக்கு தரமற்ற பொருள்களை விற்பனை செய்கின்றனர் என தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ-இ)

# நீண்டநேரம் கணினித்திரையில் இருந்தால் கண் பாதிக்கும்

***கண் மருத்துவர் எச்சரிக்கை***

*கொழும்பு,ஜன.5*

இணைய வழியாக கல்வி நடவடிக்கைகளை மாணவர்கள் முன்னெடுக்கையில் அவர்கள் கணினித் திரையின் முன்னால் அமர்ந்திருக்கும் கால எல்லை பற்றி கவனத்தில் கொள்வது அவசியம் என்று கொழும்பு கண் மருத்துவமனை விசேட நிபுணர் மானெல் பஸ்க்கு வெல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

'தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரையான வகுப்புகளைச் சேர்ந்த பிள்ளைகள் ஓய்வின்றி நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாலத்துக்கு மேல் கணினித் திரையின் முன்னால் அமர்ந்திருப்பது உசிதமானதல்ல. இதன் மூலம் அவர்களின் கண்களுக்குப் பாதிப்பு ஏற்படலாம். இந்த விடயம் தொடர்பில் ஆசிரியர்கள் மாத்திரமின்றி பெற்றோரும் கவனம் செலுத்துவது அவசியம்" என்றார். (ஐ-இ)

# யானை தாக்கி சிறுவர் படுகாயம்

*கொழும்பு, ஜன.5*

கலேமுல பகுதியிலுள்ள வீடொன்றின் மீது யானை ஒன்று மேற்கொண்ட தாக்குதலுக்கு இலக்காகி சிறுவர்கள் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதலின்போது யானை வீட்டின் சுவரை இடித்ததில் சுவர் இடிந்து வீழ்ந்து சிறுவர்கள் காயமுற்றனர் எனவும் அதில் ஒரு சிறுவனுக்கு இரு கால்களும் முறிந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# முகத்துவார பகுதிகள் தனிமைப்படுத்தலில்

*கொழும்பு, ஜன.5*

கொழும்பு - முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் இரண்டு பகுதிகள் இன்று காலை ஐந்து மணி முதல் உடன் நடைமுறைக்குவரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதன்படி, முகத்துவாரம் பொலிஸ் பிரிவின் புனித அன்ரூஸ் வீதி, புனித அன்ரூஸ் மேல் மற்றும் கீழ் வீதிகள் என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



"நிறைவான கிராமம்" என்ற திட்டத்தின் கீழ் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இளையோருக்கான தொழில் பயிற்சி நிலைய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ஐ-159)

### புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

# 368 குடும்பங்கள் தனிமையில்

***பிரதேச செயலர் தெரிவிப்பு***

*முல்லைத்தீவு,ஜன.5*

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரை 368 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் சி.ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதுக்குடியிருப்பு பிரதேசத்தைச் சேர்ந்த, தம்புள்ள மரக்கறி சந்தையுடன் தொடர்புடைய வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்டது. இதனையடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய பல குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டன.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொதிகள் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. என்றார். (ஐ-19)